இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1982 மார்ச் 20.

பங்குனி 7, துன்மதி—திருவள்ளுவர் ஆண்டு 2013

சென்னை, செயின்ட்ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவு நிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிடவேண்டும்.

1. இரங்கல் குறிப்பு.

ஆச்சார்ய கிருபாளனி அவர்களின் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்திய நாட்டின் விடுதலைப் போரின் முன்னணி வீரர்களில்-ஒருவராக விளங்கிய ஆச்சார்ய கிருபளானி அவர்கள் தமது 94ஆவது வயதில் நேற்று பிற்பகல் 2 மணி அளவில் காலமான செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1888 ஆம் ஆண்டு பிறந்த இவர் மகாத்மா காந்தியடிகளைப் பின்பற்றி, லக்னௌவில் காந்தி ஆசிரமும் காதி இயக்கமும் துவக்கினார். இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபையின் பொதுச் செயலாளராகவும், பின்னர் அதன் தலைவராகவும் விளங்கினார். ஆரம்ப முதலே தனக்குச் சரியென்று தோன்றியதைத் தயங்காமல் எடுத்துரைத்து, தலைவர்களுடன் கருத்து மாறுபாடு கொண்டாலும், மக்களின் நலனையே கருதித் தம் வாழ்நாள் பூராவும் தொண்டாற்றியவர் திரு. கிருபளானி. நாடாளுமன்றத்தில் 1971 ஆம் ஆண்டு வரையில் அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். அவர் நாட்டு மக்களுக்குக் கூறிய அறிவுரை நாம் இன்று நினைவு கூறத்தக்க ஒன்றாகும். ‘‘ எப்போதும் விழிப்புணர்ச்சியோடு இருப்பதுதான் சுதந்திரத்திற்கு நீங்கள் அளிக்கக்கூடிய விலையாகும். விழிப்புணர்ச்சியைக் கைவிட்டீர்களானால் நீங்கள் அடிமைகளாகிவிடுவீர்கள்; அரசியல்வாதிகளைப் பீடத்தில் ஏற்றி தெய்வமாக்கி விடாதீர்கள் ’’ என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அன்னாரின் மறைவுக்கு நமது இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடம் எழுந்து மவுனமாக நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 583, 584* ஆகியவை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முதலில் எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

செம்மறி ஆடுகளை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 583—திரு. து. புருஷோத்தமன், திரு. இ. கணேசன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்மறி ஆடுகளை அபிவிருத்தி செய்ய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன் : (அ) ஆம்.

(ஆ) உலக வங்கியின் உதவியுடன் 47.50 கோடி ரூபாய் மதிப்புடன் செம்மறி ஆடு அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேய்ச்சேறி செம்மறி ஆடு மைசூர் மாண்டியா ஆட்டைவிட இறைச்சியிலும், தோலினுடைய தரத்திலும் உயர்ந்தது என்று சொல்கிறார்கள். எனவே, அப்படி செம்மறி ஆடுகளை அபிவிருத்தி செய்ய அரசு திட்டம் இடும்போது மேய்ச்சேரி செம்மறி ஆடுகள் தீவிரமாக வளர்ப்பதற்கும் அல்லது அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.